**சாதாரணகூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் டிசம்பர் (14.12.2018) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை11.30 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர்/2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.452.பார்வையிட்டு பதியப்பட்டது.**

**பொருள்:2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர்/2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.453.பார்வையிட்டு பதியப்பட்டது.**

**பொருள். 3**

கூடலூர் நகராட்சியில் உள்ள கழிவறைகளை சுத்தம் செய்யும் மற்றும் உரக்கிடங்கில் தீப்பிடித்தால் தீயனை அணைக்கப்பயன்படக்கூடிய **JETTING MACHINE**வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.2951/2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.454.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 4**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34ற்கான விவாதத்தின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.14–ல் “மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Machine) நிறுவப்படும்” என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன் பேரில் கூடலூர் நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் 21 தானியங்கும் குடிநீர் மையங்கள் தனியார் தொழில் நிறுவனங்களுடன் / தொழில் முனைவோர்களுடன் இணைந்து **Corporate Social Responsibility Fund (CSR FUND)** சமூக பொறுப்புணர்வு மற்றும் பிற நிதியினை பெற்று செயல்படுத்த**05.12.2018** ம் ஆம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிபெறப்பட்டது.அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.**(ந.க.எண்.1427/2018/ இ1)**

| S.No. | Description | Rate Quoated By Dharana Infrastructure Projects Pvt Ltd,Chennai. | | |
|---|---|---|---|---|
| | | Rate to be remitted to the Municipality (Rupees per 1 Ltr.) | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) |
| 1 | Establishment of 1000 Ltr./Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in all 21 Wards in 21 Places in Gudalur Municipality under PPP mode. | 1.00 | 6.90 | 1.00 |
| | TOTAL | 1.00 | 6.90 | 1.00 |

**அலுவலகக்குறிப்பு:– 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில்Dharana Infrastructure Projects Pvt Ltd,Chennai..அவர்களின்ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.455.ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள். 5**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-10,பெத்துக்குளத்தில் கொட்டப்பட்டுள்ளது குப்பைகளை BIO MINING முறையில் அகற்றுவதற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களால் தொழில் நுட்ப அனுமதி வழங்கும் பொழுது கூறப்பட்ட அறிவுறுத்தலின்படி பணியினை தொடங்குவதற்கு முன் மேற்படி இடத்தில் உள்ள குப்பைகளை அண்ணா பல்கலை கழகத்தின் மூலம் அளவீடு செய்வதற்கான கேட்பு தொகை **ரூ.23,600**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.945/2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசரஅவசியத்தினை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.456. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 6**

இந் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு அரசாணை எண் 101 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME3) நாள் 30.04.1997 அளவு கோலின்படி 161 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.தற்போது 55 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் அளவுகோலின்படி குறைவாகவுள்ள 106 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர்,தேனி அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் பணி நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க எண் KDIS NO: 28369/JB/2018, நாள்:22.11.2018 ன்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.எனவே 106 தற்காலிக

துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்டையில் பணியமர்த்தும் பட்சத்தில் ஏற்படும் உத்தேச செலவீனம் கீழ்க்கண்டவாறு.

1) 1 நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ330/– வீதம் 1 வருடத்திற்கு
(365 * 330 *106 ) = ரூ1,27,67,700
2) தொழிலாளர் சேமநலநிதி ஊதியத்தொகை (13.16%) = ரூ 16,80,229
3) சீருடை 1 நபருக்கு ரூ2000 வீதம் ஒரு வருடத்திற்கு(106* 2000 ) = ரூ 2,12,000
4) பாதுகாப்பு உபகரணங்கள் ஒரு நபருக்கு ரூ1600 வீதம் ஒரு வருடத்திற்கு = ரூ169600
5) தளவாடச் சாமான்கள் வாங்கும் செலவீனம் (106 *1500 ) = ரூ159000
6) நிர்வாக செலவீனம் ஊதியத் தொகையில் 10 % =ரூ127670

---------

**மொத்தம்** **ரூ 16265299**

---------

ஒரு வருடத்திற்கு 106 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை பணிக்கு அமர்த்தினால் ஆகும் உத்தேச செலவு ரூ16,26,52299 க்கு அரசாணை எண் 101 (நிலை )–ன்படி பொது சுகாதார பணிகளை மேற்கொள்வதற்கு தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி அவர்களின் ஊதிய நிர்ணயம் அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் 744/2018/ எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.457.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண். 414 நாள் **10.10.2018**ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **23.11.2018** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.**(ந.க எண்.2435/2018/ இ1)**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் அலுவலகத்தின் முன்புறம் மற்றும் வடபுறம் ஆகிய பகுதிகளில் உள்ள தரையில் PORTICO TILES அமைத்தல் | 3.65 | திரு.சி.சேரலாதன் | 0.11% | – |
| | | | திரு.கே.வனராஜ் | – | 0.07% |

**அலுவலகக் குறிப்பு : –** 1) வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.11% குறைவான விலை விகிதம்கொடுத்துள்ள திரு. சி.சேரலாதன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.458.குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள். 8

தேனி மாவட்டம் கூட்டு வன மேலான்மை ஒருங்கினைப்பு குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 28.09.2018 ஆம் நாள் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தபட்டது. அக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதின்படி கூடலூர் நகராட்சி வார்டு எண் 21-ல் உள்ள பழங்குடியினர் வாழும் பகுதியான பழியன்குடியில் மழைநீர் வடிகால் சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் அமைக்க ரூ.**80.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்படி மதிப்பீட்டிற்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித்திட்டம் 2018-19 **(IUDM-201819)**ன் கீழ் நிதி ஒதுக்கீடும் நிர்வாக அனுமதியும் வழுங்கக்கோரி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்க சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது.**(ந.க எண்.2131/2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.459.அனுமதிக்கப்பட்டது.**

பொருள். 9

கூடலூர் நகராட்சியில் உள்ள பொறியாளர் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவில் உள்ள பழைய இரும்பு பொருட்கனை குறுகிய கால பொது ஏல அறிவிப்பினை தினத்தந்தி செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்காக விளம்பரக் கட்டணத் தொகை **ரூ.9,072**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க எண்.2131/2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.460.அனுமதிக்கப்பட்டது.**

பொருள். 10

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.444 நாள் 22.11.2018 ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி,நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி பொறியியல் பிரிவுக்கு தேவையான**RODOMETER**விநியோகம் செய்ய **05.12.2018** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 2368 /2018/ இ1)**

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | **YASH SCIENTIFIC CORPORATION CHENNAI** | **ரூ.3,897/-** |
| 2. | **RISHAY INSTRUMENTS AND ENGINEERING SERVICES., CHENNAI** | **ரூ.4,130/-** |
| 3. | **ANUGRAHA INSTRUMENTS CO. CHENNAI** | **ரூ.4,484/-** |

**அலுவலகக் குறிப்பு: – 1)** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.3,897/-க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள **YASH SCIENTIFIC CORPORATION CHENNAI** அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.461.குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள். 11**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-4ல் உள்ள சமுதாய கழிவறைக்கு பேவர் பிளாக்கில் அனுகு சாலை அமைத்து நிறைந்த செப்டிக்டேங்குகளை சுத்தம் செய்து OUTLET பைப்புகள் அமைக்கவும் மற்றும் மழைநீர் வடிகால் மூடியுடன் அமைக்கவும் ரூ.**7,75,000**/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண். 2949 /2018/ இ1)அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.462.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 12**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-3 கள்ளர் தெற்கு தெருவில் உள்ள சேதமடைந்த தார்ச்சாலையினை சீரமைக்க ரூ.**9,50,000**/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண். 2920 /2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.463.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 13**

கூடலூர் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களின் வருகையினை அன்றாடம் பதிவு செய்வதற்கு BIO METRIC DEVICE இரண்டு நிறுவிட உண்டாகும் செலவினம் ரூ.**60,000/-க்**கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண். 2952 /2018/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.464.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 14**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி குப்பைகிடங்கில் உள்ள குப்பைகளை BIO MINING முறையில் அப்புறப்படுத்த தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 22866/P3/நாள் **23.08.2018** ன்படி நிர்வாக அனுமதியும் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 18281/2018/DO2 நாள் **05.09.2018**ன் படி தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு **11.12.2018** ஆம் நாள் பணிகளை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ளும் இடத்திற்கு தேவையான 80 K.W மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு தொகைக்கும் மற்றும் மின் இணைப்புகள் பெறுவதற்கான பணிகள் மேற்கொள்ளவும் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.**4,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண். 945 /2018/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.465.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 15**

கூடலூர் நகராட்சியில் உள்ள அனைத்து 21 வார்டுகளிலும் உள்ள பகிர்மான குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக வால்வுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்களில் உண்டாகும் உடைப்பினை சரிசெய்ய ஒரு வருட காலத்திற்கு ரூ.**9,50,000/-**க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. 

**தீர்மான எண்.466.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 16**

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண். 413 நாள் 10.10.2018 ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் தனி நபர் கழிவறை அமைக்கும் பணிக்கு தேவையான கழிவறை கோப்பைகள் மற்றும் தகரத்தினால் ஆன கழிவறை கதவுகள் 200 எண்ணம் விநியோகம் செய்வதற்கு **07.12.2018** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 945/2018/ இ1)**

| வ. எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) | |
|---|---|---|---|---|
| | | | கழிவறை கோப்பை | தகரத்தினால் ஆன கழிவறை கதவு |
| 1 | கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் தனி நபர் கழிவறை அமைக்கும் பணிக்கு தேவையான கழிவறை கோப்பைகள் மற்றும் தகரத்தினால் ஆன கழிவறை கதவுகள் 200 எண்ணம் விநியோகம் செய்தல். | இராஜேந்திரா ஸ்டோர்ஸ் மெயின் ரோடு கம்பம் | ரூ.720 | ரூ.1160 |
| | | ஆர்.ஆர் எலக்ட்ரிக்கல்ஸ் மெயின் ரோடு கம்பம் | ரூ.740 | ரூ.1200 |
| | | கே.எம்.பி.எல் எலக்ட்ரிக்கல்ஸ் ,கம்பம் | ரூ.730 | ரூ.1130 |

**அலுவலகக் குறிப்பு : –1)** வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை கொடுத்துள்ள. **இராஜேந்திரா ஸ்டோர்ஸ்**அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.467.ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 17**

கூடலூர் நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Machine) நிறுவப்படும் பணி குறித்த ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தென்னக அளவிளாள செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்காக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்சீஸ் அவர்களுக்கு விளம்பரக் கட்டணத் தொகை **ரூ.86,625**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண்.1732/2018/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.468.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 18**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி பொது மயானத்தில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2014-15ன் கீழ் கட்டி முடிக்கப்பட்ட நவீன எரிவாயு தகன மேடையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு (NGO) தொண்டு நிறுவனத்தின் பராமரிப்பில் இயக்கி பராமரிப்பு செய்வதற்கு கீழ்கண்டவாறு மூன்று தொண்டு நிறுவனத்தாரால் கடிதங்கள் கொடுக்கப்பட்ட விபரம் பின்வருமாறு **(ந.க.எண்.3081/2014/ இ1)**

| வ.எண் | தொண்டு நிறுவண விபரம் | எரியூட்டு கட்டணம் ஒரு எரியூட்டுகிறது | | பிற விபரங்கள் |
|---|---|---|---|---|
| | | பொதுமக்களிடம் வசூல் செய்யும் தொகை ரூபாய் | நகராட்சியில் செலுத்தும் தொகை ரூபாய் | |
| 1 | பெரியார் சேவை மய்யம்,பெரியார் சமத்துவம் அறக்கட்டளை 23/126 பெரியாண்டவர் நெடுஞ்சாலை,பெரியார் வளாகம்,போடி | தொகை ஏதும் குறிப்பிடவில்லை | | |
| 2 | சுக்தி பவுண்டேசன் 240,வண்டிக்காரத்தெரு , நகராட்சி அலுவலகம் எதிரில்,இராமநாதபுரம் | 3700 | 500 | |
| 3 | TEED பவுண்டேஷன் 5/422,கங்கை தெரு, ஏஞ்சல் நகர் ,ஆத்திகளம் ,மதுரை | 3500 | 500 | ஒரு ஆண்டு காலத்திற்கு இயந்திர பராமரிப்பு செய்தல் |

அலுவலக குறிப்பு:-

1) வரிசை எண் 1ல் உள்ள தொண்டு நிறுவனத்தார் எரியூட்டுக்குரிய கட்டண விபரங்கள் ஏதும் குறிப்பிடவில்லை,வ.எண்-2ல் உள்ள தொண்டு நிறுவனத்தார் ஒரு எரியூட்டுக்கு ரூ.3700/-வசூல் செய்து,அதில் ரூ. 500 /–ஐ நகராட்சிக்கு செலுத்துவதாகவும் மற்றும் வ.எண்-3ல் உள்ள தொண்டு நிறுவனத்தார் ஒரு எரியூட்டுக்கு ரூ.3500/-வசூல் செய்து,அதில் ரூ. 500 /–ஐ நகராட்சிக்கு செலுத்துவதாகவும் கடிதம் கொடுத்துள்ளார்.மேலும் மேற்படி தொண்டு நிறுவனத்தார் ஒரு வருட காலத்திற்கு இயந்திர பராமரிப்பினை தாங்களே மேற்கொள்ளவதாகவும் கடிதம் கொடுத்துள்ளார் .மேலும் மதுரை மாநகராட்சி மற்றும் சில நகராட்சிகளிலும் நவீன எரிவாயு தகனமேடையினை பராமரிக்கும்.பணிகளை மேற்கொண்டு செய்து வருகிறார்கள்.எனவே வரிசை எண் 3ல் உள்ள TEED பவுண்டேசன் மதுரை அவர்களுக்கு இந்நகராட்சி நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பினை கீழ் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நிபந்தனைகள்**

1. கூடலூர் நகராட்சி நவீன எரிவாயு தகனமேடை மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
2. கூடலூர் நகராட்சி நவீன எரிவாயு தகனமேடை கூடத்தில் சடலம் ஒன்றுக்கு ரூ.3500/– மேலும் சடலம் எரியூட்ட பெறப்படும் தொகையான ரூ.3500/–ல் ரூ.500/-யை நகராட்சிக்கு செலுத்த வேண்டும். நகராட்சியால் அமைக்கப்படும் நிர்வாகக் குழுவின் மூலமே மேற்படி கட்டணத்தை அதிகமாக்கவோ அல்லது குறைக்கவோ இயலும்.
3. மேற்படி நகர்மன்றத்தால் தீர்மானம் செய்த கட்டணத்தொகை மட்டுமே பெற வேண்டும், தவிர கூடுதல் கட்டணம் வசூலிக்க கூடாது. கட்டண விபரம் குறித்து பொதுமக்கள் பார்வைக்கு அறிவிப்பு பலகை வைத்திருக்க வேண்டும்.
4. இங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு தங்கள் தொண்டு நிறுவனம் மூலமே ஊதியம் வழங்க வேண்டும்.
5. இறப்பு பதிவினை 7 நாட்களுக்கு ஒருமுறை நகராட்சி அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.
6. எரிவாயு மயான கூடம் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை இயங்க வேண்டும்.
7. மேற்படி கட்டிடத்தின் கட்டமைப்பில் எவ்வித மாறுதலும் தாங்களாக மேற்க்கொள்ளக் கூடாது. ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படுத்தக்கூடாது.
8. பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் புகார் பதிவு செய்ய வசதி செய்யப்பட வேண்டும்.
9. அஸ்தியினை 24 மணி நேரம் கழித்து (அடுத்த நாள் காலை 9 மணிக்குள்) வழங்க வேண்டும்.
10. ஒப்படைக்கும் நாள் முதல் 1 வருடத்திற்கு இந்த பராமரிப்பு பணி TEED நிறுவனத்திற்கு வழங்கலாம்.
11. கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் ஒப்படைத்த நல்ல நிலையிலேயே திரும்ப வழங்கப்பட வேண்டும்.
12. மேலே உள்ள நிபந்தனைகள் மீறப்பட்டால் எந்த நேரத்திலும் உத்தரவு ரத்து செய்யப்படும்.
13. கட்டிடம் ஒப்படைத்தபின் ஒப்பந்தபத்திரம் தயார் செய்து மூன்று நாட்களுக்குள் நகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.
14. எரிவாயு மயான கூடத்திற்கான மின்சார கட்டணம் முழுவதும் தாங்களே உரிய நேரத்தில் செலுத்த வேண்டும்.
15. நகராட்சி தேவைக்கு எப்போது திரும்ப ஒப்படைக்க கோரினாலும் எந்த விதமான ஆட்சேபனை இன்றியும், எந்த விதமான நஷ்ட ஈட்டுத்தொகை கோராமலும் நவீன எரிவாயு தகனமேடை இயங்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும்.
16. மேற்படி இடம் மயானக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

17. சட்ட விரோதமான காரியங்கள் எதுவும் நடைபெற கண்டிப்பாக அனுமதிக்கப்படக் கூடாது.

18. இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர அரசியல் சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் உள்ளிட்ட வேறு எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும் அவ்விடத்தை அறக்கட்டளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது.
19. ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை பயன்படுத்தக்கூடாது.
20. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி/அரசு நிர்வாகம் அவ்வப்போது வகுக்கும் விதி முறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும்.
21. குறைந்த பட்சம் பராமரிப்பு காலம் மூன்று ஆண்டுகள் என்பதை நகராட்சி திருத்த விருப்பப்பட்டால் மேலும் நீடித்துக்கொள்ளவோ அல்லது குறைத்து கொள்ளவோ அறக்கட்டளை சம்மதம் தொவிக்க வேண்டும்.
22. அறக்கட்டளை பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு ஒரு வருட காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.
23. எரியூட்டும் சடலத்திற்கு வசூலிக்கப்படும் தொகையினை நிர்வாகக்குழு அவ்வப்பொழுது நிர்ணயிப்பதுடன் அத்தொகையில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்குத்தொகையினை நிர்வாகக்குழு அவ்வப்பொழுது நகராட்சி கருவூலத்தில் உடன் செலுத்தப்பட வேண்டும்.
24. நிபந்தனைகள் மீறப்பட்டதிற்காக மூன்று ஆண்டு காலத்திற்குள் பராமரிப்பு ரத்து செய்யப்பட்டால், நவீன எரிவாயு தகனமேடையிலுள்ள அனைத்து கருவிகள் மற்றும் உபகரணங்கள் நகராட்சியே ஏற்றுக்கொள்ளும்.
25. பராமரிப்புக் காலத்தில் கணக்குகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிந்தவுடன் அடுத்து ஒரு மாத காலத்திற்குள் தணிக்கை பட்டய கணக்காளர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) மூலமாக தணிக்கை செய்ய வேண்டும். நகராட்சி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தணிக்கையாளரின் மூலம் முறையாக காலமுறைப்படி தணிக்கைச்சான்று பெற வேண்டும்.
26. நவீனஎரிவாயு தகனமேடை, நிர்வாகக்குழு நிர்ணயிக்கும் தொகையை எரியூட்டப்படும் சடலத்துக்கு கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும். மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்க ஆகும் செலவினத்தை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பராமரிப்புக்கு ஆகும் செலவினத்தை பொறுத்து நகராட்சியும், அறக்கட்டளையும் சேர்ந்து நகராட்சி நிதி நிலை பாதிக்காத வகையில் வசூலிக்கும் கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டும்.
27. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது நவீனஎரிவாயு தகனமேடையினை பயன்படுத்திட வேண்டும்.
28. எரிவாயு மூலம் எரியூட்டப்படும் சடலத்துக்கு வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவீதத்தை நகராட்சிக்கு உரிய கட்டணமாக கருவூலத்தில் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
29. நவீனஎரிவாயு தகனமேடையினை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் ஆகிய செலவினங்களை எரிவாயு மயான அறக்கட்டளை ஏற்க வேண்டும்.
30. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப்பிரச்சனைகளுக்கு அறக்கட்டளையே பொறுப்பேற்க வேண்டும்.
31. தமிழ்நாடு அரசு ஆணை (3டி) எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, நாள் 11.05.2005–ன்படி நவீன எரிவாயு தகனமேடை அமைப்பது தொடர்பான அனைத்து நிபந்தனைகளுக்கும் நகராட்சிக்கு அறக்கட்டளை சம்மதம் தெரிவிக்க வேண்டும்.
32. நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பதற்காக கீழ்க்கண்ட ஒரு நிர்வாக குழு (Administrative Committee) அமைக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1) | நகராட்சி நவீன எரிவாயு தகனமேடை அறக்கட்டளை (Managing Trustee) | – | தலைவர் |
| 2) | நகராட்சி ஆணையாளர் | – | செயலாளர் |
| 3) | நகராட்சி துப்புரவு ஆய்வாளர் | – | செயல் உறுப்பினர் |
| 4) | நகராட்சி பொறியாளர் | – | உறுப்பினர் |
| 5) | நகராட்சி நகரமைப்பு ஆய்வர் | – | உறுப்பினர் |
| 6) | நவீனஎரிவாயு தகனமேடை அறக்கட்டணை மேனேஜர் டிரஸ்டி ஒப்புதல்படி நியமிக்கப்படும் ஒரு அறக்கட்டளை உறுப்பினர் | – | உறுப்பினர் |

33. மேலே உள்ள 1 முதல் 32 வரையில் உள்ள நிபந்தனைகளில் எந்தவொரு நிபந்தனையாவது மீறப்பட்டா

மேற்படி உத்தரவினை ரத்து செய்யலாம்.

**தீர்மான எண்.469.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 19**

இந்நகராட்சிஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் பொருட்டு **23.11.2018** ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்**(ந.க எண் 2462./2018/எச்1)**

| வ .எண் | பொருட்களின் விபரம் ( 1 எண்ணம்) | ஆர்.கே.ஏஜென்சிஸ், சென்னை | எஸ்.என் எண்டர் பிரைசஸ், சென்னை |
|---|---|---|---|
| 1 | Mini Fogging Machine (indoor) | ரூ22,420/– | ரூ23500/– |
| 2 | Cylinder | ரூ312.70/– | ரூ350/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் ஆர்.கே.ஏஜென்சிஸ், சென்னை நிறுவனமானது குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஆர்.கே.ஏஜென்சிஸ், சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார அவசிய அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.470.குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள். 20**

இந்நகராட்சிஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ளும் பொருட்டு **23.11.2018** ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம்

| வ .எண் | பொருட்களின் விபரம் ( 1 எண்ணம்) | சிஸ்டம்ஸ், என்ஜினியரிங், சென்னை | எஸ்.என் எண்டர் பிரைசஸ், சென்னை |
|---|---|---|---|
| 1 | Super Fogging (Pulse Fog - Machine (indoor) | ரூ72600/ | ரூ74000/– |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் சிஸ்டம்ஸ் என்ஜினியரிங், சென்னை நிறுவனமானது குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளது. குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **சிஸ்டம்ஸ், என்ஜினியரிங்,**சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க எண்2462/2018/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார அவசிய அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று சப்ளை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.471. முன்அனுமதி (வழங்கப்பட்டது) அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 21**

கூடலூர் நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 60 T 8806 (SKY LADDER)-க்கு வருடாந்திர பராமரிப்பு பணிகளான கிளட்ச் பிளேட் மாற்றுதல், வீல் பேரிங், பிரேக் ஆயில் இஞ்சின் ஆயில், கூலண்ட் ஆயில், ஆயில் பில்டர், டீசல் பில்டர், ஏர் பில்டர், ஹைட்ராலிக் ஆயில், டிப்பிங் பின், ஹைட்ராலிக் வயர் மாற்றுதல், வயரிங் வேலைகள், பெயிண்டிங் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்றிதழ் பெறுவதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ97,500/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.472.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

கூடலூர் நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் TN 60 T 8806 (SKY LADDER)வாகனத்திற்கு **2018—2019** ஆம் ஆண்டிற்கான வருடாந்திர காப்பீட்டு தொகை செலுத்துவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ19,000/—த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.473.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

கூடலூர் நகராட்சி அலுவலகத்தின் பின் புறம் **BOV**வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தரையில் போர்டிகோ டைல்ஸ் அமைத்து கணினிவரி வசூல் மையத்திற்கு மேடை அமைக்க **ரூ.2,00,000**/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.474.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.24**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-10,பெத்துக்குளத்தில் கொட்டப்பட்டுள்ளது குப்பைகளை BIO MINING முறையில் அகற்றுவதற்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.மேற்படி பணிக்கு தொழில் நுட்ப அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது அனுமதி வழங்கும் பொழுது கூறப்பட்ட அறிவுறுத்தலின்படி பணியினை தொடங்குவதற்கு முன் மேற்படி இடத்தில் உள்ள குப்பைகளை அண்ணா பல்கலை கழகத்தின் மூலம் அளவீடு செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.2,00,000**/-க்கு மன்றத்தின்அனுமதிவேண்டப்படுகிறது. **(ந.க.எண்.945/2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.475.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.25**

கூடலூர் நகராட்சியில் அன்றாடம் சேகரமாகும் குப்பைகள் மற்றும் மக்கா குப்பைகள் என தரம்பிரித்து அதிலிருந்து உரம் தயாரிக்க நகராட்சி பொது மயானத்தில் அமைக்கபட்டுள்ள நுண் உரம் செயலாக்க மையத்திற்கு (MCC) தேவையான இயந்திரங்கள் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.8,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.3213/2018/ இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.476.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.26**

நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண். 416 நாள் **10.10.2018**ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **23.11.2018** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.2436/2018/ இ1)**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் அலுவலகத்தில் நகராட்சி பணியாளர்கள் பயன்படுத்தும் கழிவறை ஆணையாளர் அறை,பொறியாளர் அறை,நகர்மன்றக்கூடம் ஆகியவற்றில் உள்ள கழிவறைகளில் மராமத்து பணிகள் செய்தல் மற்றும் அலுவலகத்தின் பின்புறம் அமைத்தல் தகர மேற்கூரையினாலான செட் அமைத்து மழைநீர் சேகரிப்பு அமைத்தல் | 10.00 | திரு.எம்.சுருளி | 0.11% | – |
| | | | திரு.அ.தெய்வேந்திரன் | – | 0.07% |

**அலுவலகக் குறிப்பு : – 1)** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட **0.11%**குறைவான விலை விகிதம்கொடுத்துள்ள **திரு.எம்.சுருளி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.477.குறைந்த விலை விகிதம் அங்கீகரிக்கப்பட்டது.**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி**

பொருள். 16

இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண். 413 நாள் 10.10.2018 ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் தனி நபர் கழிவறை அமைக்கும் பணிக்கு தேவையான கழிவறை கோப்பைகள் மற்றும் தகரத்தினால் ஆன கழிவறை கதவுகள் 200 எண்ணம் விநியோகம் செய்வதற்கு **07.12.2018** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 945/2018/ இ1)**

| வ. எண் | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) | |
|---|---|---|---|---|
| | | | கழிவறை கோப்பை | தகரத்தினால் ஆன கழிவறை கதவு |
| 1 | கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் தனி நபர் கழிவறை அமைக்கும் பணிக்கு தேவையான கழிவறை கோப்பைகள் மற்றும் தகரத்தினால் ஆன கழிவறை கதவுகள் 200 எண்ணம் விநியோகம் செய்தல். | இராஜேந்திரா ஸ்டோர்ஸ் மெயின் ரோடு கம்பம் | ரூ.720 | ரூ.1160 |
| | | ஆர்.ஆர் எலக்ட்ரிக்கல்ஸ் மெயின் ரோடு கம்பம் | ரூ.740 | ரூ.1200 |
| | | கே.எம்.பி.எல் எலக்ட்ரிக்கல்ஸ் ,கம்பம் | ரூ.730 | ரூ.1130 |

**அலுவலகக் குறிப்பு : –1)** வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தொகை கொடுத்துள்ள. **இராஜேந்திரா ஸ்டோர்ஸ்**அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.